# ஆன்லைன் வேதாகமத் தேர்வு (BIBLE QUEST) விவரங்கள்

தேர்வு முறை

பைபிள் கொஸ்ட் (Bible Quest) 2020 ஆன்லைன் முறையிலும், தாளில் எழுதும் முறையிலும் நடத்தப்படும். ஆன்லைனில் எழுத எங்கிருந்து வேண்டுமானாலும் கொடுக்கப்பட்ட நேரத்தில் கம்ப்யூட்டர் அல்லது ஸ்மார்ட் போன் மூலமாக எழுதலாம். தாளில் எழுதும் முறை அந்தந்த மையங்களில் எப்பொழுதும் நடத்தப்படுவதுபோல் நடத்தப்படும். இருப்பினும் தேர்வு மையத்தைப் பதிவுசெய்தல் BQ இணையதளத்தின் வாயிலாக நடைபெறும் (உங்களால் மையத்தைப் பதிவு செய்ய முடியாவிட்டால், எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்; நாங்கள் மாற்று ஏற்பாடுகள் செய்வோம்).

பதிவு செய்யும் முறை:

ஆன்லைன் வேதாகமத்தேர்வு மையம் பதிவு துவங்குவது: 10, செப்டம்பர் 2020

இணையதளம்: https://biblequest.in

பதிவு கட்டணம்: ரூ.30/-நபருக்கு.

1. எழுதுபவர் பதிவு செய்தல் - தனிநபர் பதிவு மற்றும் குழுப்பதிவு

a. தனிநபர் பதிவு என்பது எந்த மையத்தோடும் இணையாமல் நேரடியாக தனிப்பட்ட முறையில் பதிவு செய்தலாகும். அவர்களுக்கு அவ்வப்போது தேவையான தகவல் பரிமாறப்படும், அவர்களுக்கு அனுப்பப்படும் இ-மெயில்களில் BQ இணையதளத்தில் சென்று பார்க்கும் வசதி செய்து தரப்படும்.

b. குழுப்பதிவு என்பது 10 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் எழுதும் பட்சத்தில் மையப் பொறுப்பாளர்கள் செய்ய வேண்டும். இதில் இரண்டு வாய்ப்புகள் இருக்கும்:

i. ஆன்லைன் தேர்விற்கு: பதிவு செய்தவுடன், பங்கு பெறுபவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு "பயனர் உள்நுழைவு" (User logins) களை இயந்திரமுறையே தயார் செய்து, அவற்றை இ-மெயில் வாயிலாக மையப் பொறுப்பாளருக்கு அனுப்பும். ஆன்லைனில் பங்கெடுப்பவர்கள் BQ இணையதளத்தில் நுழைவதற்கு அவரவருக்குரிய தனிப்பட்ட "பயனர் உள்நுழைவு"களை மையப் பொறுப்பாளர்கள் அவரவர்களிடம் கொடுக்க வேண்டும்.

ii. பங்கெடுப்பவர்கள் தேர்வு எழுதும்போது, தங்களின் பெயர், வயது மற்றும் தேவையான தகவல்களை கருவியில் பதிவுசெய்ய வேண்டும்.

iii. தாளில் தேர்வு: மையப் பொறுப்பாளர் முழுமையாகப் பதிவு செய்ய வேண்டும். தேர்வு நாளன்று, வினாத்தாளும் பதிலளிக்க வேண்டிய தாளும் பதிவிறக்கம் செய்யத்தக்கதாக மையப் பொறுப்பாளர் இ-மெயில் முகவரிக்கு அனுப்பப்படும். மையப் பொறுப்பாளர்கள் தன்தன் மையத்தில் எழுதுகிற அனைவருக்கும் போதுமான அளவிற்கு அவற்றைப் பிரிண்ட் செய்து பிரதிகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

c. பதிவுக் கட்டணம் முழுமையாக செலுத்தப்பட்ட பின்னரே ஒவ்வொரு பதிவும் பூர்த்தியாகும். குழுப்பதிவிற்கு குறைக்கப்பட வேண்டிய சலுகைகளை குறைத்து, கட்டப்பட வேண்டிய இறுதிக் தொகை இயந்திர முறைமையாக காண்பிக்கப்படும். மையப் பொறுப்பாளர்கள் தேர்வு எழுதும் ஒவ்வொருவரிடம் இருந்தும் ரூ.30 மட்டுமே கட்டணமாக வசூலிக்க வேண்டும். பதிவுக் கட்டணத்தை நெட் பாங்கிங், கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு அல்லது வாலட் வாயிலாக செலுத்தலாம். (மையப்

பொறுப்பாளர் ஆன்லைன் வழியாக பணம் செலுத்த இயலாவிட்டால், BQ அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.)

2. ஆன்லைன் தேர்வர்கள் ஆன்லைன் BQ தேர்வு முறைகளில் தங்களைப் பழக்கிக் கொள்ள, தங்கள் “பயனர் உள்நுழைவுகளை” (User logins) பயன்படுத்தி, நவம்பர் 1ந் தேதி முதல் போலி BQ தேர்வுகளை (Mock Test) எழுதிக்கொள்ள வேண்டும்.

தேர்வு அம்சங்கள்

1. அறிவிக்கப்பட்ட மொழிகளில் பதிலைத் தெரிந்தெடுக்கும் (multiple-choice) முறையில் தேர்வு நடத்தப்படும்.

2. ஆன்லைன் மற்றும் தாளில் எழுதுதல் முறையில் தேர்வு நடைபெறும்.
   - பதில் எழுதப்பட்ட தாள்களை தனிப்பட்ட வரிசைகிரமப் பதிவு எண்களின்படி இயந்திர முறையாக ஏற்றுக்கொள்ளும்.

3. ஆன்லைன் தேர்வு முறைமையில் ஒருவரின் கேள்வித்தாள் போல் மற்றவரின் கேள்வித்தாள அமையாதவாறு, சீரற்ற (random) முறையில் இயந்திர முறையாக கேள்விகளை தெரிந்தெடுத்துக் கொள்ளும்.

4. ஆன்லைனில் தேர்வு எழுதுபவர்கள் குறிக்கப்பட்ட தேர்வு நேரத்தின்போது ஒருமுறை மட்டுமே தேர்வு எழுத முடியும்.

5. தேர்வு எழுதுபவர்களுக்கு குறிப்பிட்ட கேள்விக்கும், மொத்தமான தேர்விற்கும் குறிக்கப்பட்ட அளவு நேரம் மட்டுமே வழங்கப்படும். ஒவ்வொரு கேள்விக்கும் எஞ்சியுள்ள நேரத்தை உங்கள் கருவியானது அதின் திரையில் காண்பிக்கும், அக்கேள்விக்கான நேரம் முடிந்தவுடன், அடுத்த கேள்வி திரைக்கு வந்துவிடும். மொத்தமாக தேர்வு முடிய எஞ்சியுள்ள நேரமும் திரையில் காண்பிக்கப்படும், அந்நேரம் முடிந்தவுடன் தேர்வு தானாக முடிந்துவிடும்.

முடிவுகளும் பரிசுகளும்

1. தேர்விற்குப்பின், கொஞ்சக்காலத்தில் முடிவுகளும், மதிப்பெண்களும், தரவரிசையும் இ-மெயில் மூலமாக எழுதியவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

2. ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 இடத்தைப் பிடித்தவர்களுக்கான ரொக்கப் பரிசுகளும் மற்றும் சான்றிதழ்களும் மையப் பொறுப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

3. பங்கேற்பிற்கான சான்றிதழ்கள் மையப் பொறுப்பாளர்கள் / தேர்வு எழுதியவர்களுக்கு பதிவிறக்கம் செய்யப்படக்கூடிய லிங்க் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.